அ.வ.எண்.96/2013 சகுந்தலா 13.02.2020

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா சொத்துக்களில் வருமானம் வந்ததாக சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல. 3 முதல் 5 பிரதிவாதிகள் தனித்தனியாக அவர்கள் சொந்த வருமானத்தை கொண்டு கிரையம் வாங்கப்பட்டது. 3ம் பிரதிவாதியின் மனைவி 4ம் பிரதிவாதி. 4ம் பிரதிவாதியின் தாயார் பெயர் சரஸ்வதி. அவர் மேலப்பாளையத்தை சேர்ந்தவர். சக்திவேல் அவருடைய பேரன். அந்த அம்மா சக்திவேல் பெயரில் சொத்து வாங்கி வைக்கவில்லை. சொத்துவிரம் கொடுத்துள்ளது பொய் என்றால் சரியல்ல. சொத்திலிருந்து வருமானம் வருகிறது என்பதற்கு கணக்குவிரவம் வைத்துள்ளேன். தனிப்பட்ட வருமானத்தை கொண்டு வாங்கியது சொத்து என்றால் சரியல்ல. 10.07.2000ம் தேதியில் நாங்கள் எந்தவிதமான பத்திரமும் நாங்கள் வாதி பெயருக்கு எழுதிக்கொடுக்கவில்லை. வழக்குரையில் காட்டப்பட்டுள்ள சொத்துக்களில் 3ம் பிரதிவாதி தான் குடியிருந்து வருகிறார். அந்த வீட்டில் 20, 30 வருடங்களாக குடியிருக்கிறார். அந்த சொத்துக்கள் சம்மந்தமாக பத்திரம் எதுவும் இல்லை. அந்த வீடு கட்டியதற்கு கணக்கு எதுவும் இல்லை. பட்டா என் பெயரில் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அறிவிப்பில் நான் சுப்பிரமணி, சாரதம்மாள் ஆகியோர்கள் பெயரில் உள்ள சொத்துக்களுக்கு பாகம் கேட்டேன். சுப்பிரமணி, சாரதம்மாள், சக்திவேல் ஆகியோர்கள் பெயரில் பத்திரம் ஏற்பட்ட விவரத்தை சொல்லியுள்ளேன். அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு 3, 4, 5 பிரதிவாதிகளின் பெயரில் உள்ள சொத்திற்கு நகல் வாங்கினேன். அந்த பத்திரங்களை நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சொத்துவிவரங்கள் முற்றிலும் தவறானது என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தில் எனக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. எனக்கும், ராஜம்மாளுக்கும் விரோதம் எதுவும் இல்லை. எனக்கும், என் அம்மாவுக்கும் விரோதம் இல்லை.

ஒம்/சகுந்தலா,
ஒம்/C.ஸ்ரீதர்,
சார்பு நீதிபதி,
குளித்தலை.